# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.க.ப.முகமது அலி, பி.இ.,எம்.பி.ஏ.,

ந.க.எண். 4452/2018 மம 4, நாள்.25.09.2018.

திருவள்ளுவர் ஆண்டு 2049, விளம்பி வருடம், புரட்டாசி திங்கள் 9 -ஆம் நாள்.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - மதுரை மண்டலம் - மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம் / ஊராட்சி ஒன்றியம், இலங்கியேந்தல் ஊராட்சி / கிராமம், ச.எண்கள். 32/1ஏ, 32/1பி1(ப), 33/2ஏ, 33/2பி(ப) , (மற்றும் புதுத்தாமரைப்பட்டி ஊராட்சி, கொடிக்குளம் பிட்-2 கிராமம், ச.எண்கள்.- 166/2ஏ2, 166/2பி, 167/1பி,167/1சி, 167/2ஏ, 167/2பி, 167/2சி, 167/2டி., மற்றும் 168 - மதுரை உள் ர் திட்ட கு ம ம அலுவலக எல்லை பகுதி)-ல் 17.09 ஏக்கர் (69145.90 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 13.10.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.55, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 2.5.2018
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை -02, அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண். 13193/2017/எல்ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4. இவ்வலுவலகக் கடிதம் இதே எண் நாள்.03.07.2018. (மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு முகவரியிடப்பட்டது)
5. உறுப்பினர் செயலர் (பொ), மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1502/2018/மதி2, நாள்.05.09.2018.
6. மனுதாரர் திரு.K.மோகன்ராஜ் அவர்களின் விண்ணப்பம் எண். DTCP/L/0070955/2017 மற்றும் DTCP/L/0070956/2017,நாள். 02.04.2018.

*****

உத்தரவு :

பார்வை (1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (6)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 4-ல் கண்ட இவ்வலுவலகக் கடிதம் மூலம் மனைப்பிரிவு வரைபடம் மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பார்வை 5-ல் கண்ட தங்களது கடிதம் மூலம் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்ட வரைபடம் பெறப்பட்டதனை தொடர்ந்து கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

Self attested

K Mohanraj

(K.MOHANRAJ)

Scanned by CamScanner

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம் / ஊராட்சி ஒன்றியம், இலங்கியேந்தல் ஊராட்சி / கிராமம், ச.எண்கள். 32/1எ, 32/1பி1(ப), 33/2எ, 33/2பி(ப) , (மற்றும் புதுத்தாமரைப்பட்டி ஊராட்சி, கொடிக்குளம் பிட்-2 கிராமம், ச.எண்கள்.- 166/2எ2, 166/2பி, 167/1பி,167/1சி, 167/2எ, 167/2பி, 167/2சி, 167/2டி, மற்றும் 168 - மதுரை உள்ளூர் திட்ட கு ம ம அலுவலக எல்லை பகுதி)-ல் 17.09 ஏக்கர் (69145.90 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ(மு)/ந.ஊ.து.இ(மம) எண்.597/2018 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு மேல்நடவடிக்கைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 17.09 ஏக்கர் (69145.90 ச.மீ) |
| சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தின்படி மொத்த மனைகள் | : | 364 எண்ணம். |
| ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 356 எண்ணம். |
| ஒதுக்கப்பட்ட மனை எண்கள் | : | 1-27,27எ,28,28எ,29-49,49எ,49பி,49சி, 50,50எ,50பி,50சி,51-226,226எ,227-301,310-355 மற்றும் மனுதாரர் உபயோகம் |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 03 எண்ணம். |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 2, 4, 48 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 353 எண்ணம். |
| விற்கப்படாத மனை எண்கள் | : | 1,3,5-27,27எ,28,28எ,29-47,49,49எ,49பி, 49சி, 50,50எ,50பி,50சி,51-226,226எ,227-301,310-355 |

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 5207.75ச.மீ (10.19 %)
(இலங்கியேந்தல் கிராம எல்லைக்குள் ஒதுக்கப்பட்ட பூங்காவின் பரப்பளவு (பூங்கா 1 முதல் 7 வரை) = 2574.55 ச.மீ - 10.18 %

கொடிக்குளம் பிட் 2 கிராம எல்லைக்குள் ஒதுக்கப்பட்ட பூங்காவின் பரப்பளவு (பூங்கா 8 முதல் 14 வரை) = 2633.20 ச.மீ - 10.19 %

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்

1. பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | 1, 3, 5-47, 49-301, 310-354, 27எ, 28எ, 49எ, 49பி, 49சி, 50எ, 50பி, 50சி, 227எ ஆகிய 352 மனைகளுக்கு பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

Self attested
K Moharraj
K. MOHANRAJ

Scanned by CamScanner

2. வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்

| ஒதுக்கப்பட்ட மனை எண்கள். | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 30/- வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/-வீதம்) |
|---|---|---|
| 1-27,27எ,28,28எ,29-49,49எ,49பி,49சி, 50,50எ,50பி,50சி,51-226,226எ,227-301,310-355 மற்றும் மனுதாரர் உபயோகம் | வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுர மீட்டருக்கு ரூ. 30/- வீதம் செலுத்தப்படல் வேண்டும். | வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் செலுத்தப்படல் வேண்டும். |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

(அ). வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| 0217.Urban Development - 60 Other Urban Development Scheme -, 800. Other receipts AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots - DTCP (DPC 0217 60 800 AT 0007) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

(ஆ). வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் : உள்ளாட்சியில் பெற்று செலுத்தப்படல் வேண்டும்

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படல் வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கும் அல்லது முறைப்படுத்தக் கோரும் மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்றும் (2)-ல் கட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 13.10.2017-ல் விதி எண். 7(ඉ)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவைபல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

3. ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் முமையாக பின்பற்றப்படல் வேண்டும்.

Self attested
K Mohanraj
K.MOHANRAJ

Scanned by CamScanner

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. உள்ளூர் திட்டக் குழுமப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு பகுதிக்கு உள்ளூர் திட்டக் குழும விதிகளுக்குட்பட்டு மனைப்பிரிவு/திட்ட அனுமதி வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மனுதாரர் மேற்கொண்டு உறுப்பினர் செயலர் (பொ), மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களை அணுகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
மதுரை மண்டலம்.

26/9/18

<u>இணைப்பு</u>
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

<u>பெறுநர்</u>
உறுப்பினர் செயலர் (பொ),
மதுரை உள்ளூர் திட்டக் குழுமம்,
மதுரை -2

<u>நகல்</u>

1. திரு.K.மோகன்ராஜ்,
   239, Lloyds Road,
   GG Springs 1B,
   Gopalapuram,
   Chennai-86.

2. தொழில்நுட்ப வைப்பறை - 1 வரைபடம்

Self attested
K Mohanraj
K MOHANRAJ

Scanned by CamScanner

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.பி.இராமர்

ந.க.எண்:3588/2018/தி3

நாள்:20.11.2018.

பொருள் : மதுரை மாவட்டம் - மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - புதுத்தாமரைப்பட்டி ஊராட்சி -கொடிக்குளம் II பிட் கிராமம் சர்வே எண்கள்:166/2A2, 2B,167/1B, 1C, 2A, 2B, 2C, 2D, 168 -ல் 25837.75 ச.மீ மற்றும் இலங்கியேந்தல் ஊராட்சி சர்வே எண்கள் 32/1எ, 32/1பி1(ப), 33/2எ, 33/2பி(ப)- ல் 25279.25 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு வடிவமைப்பிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியது - வரன்முறைப்படுத்தி உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை :

1) அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.125, பாகம்-III பிரிவு 1(a), நாள்:04.05.2017
2) அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 13.10.2017
3) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மாநகராட்சி அலுவலக வளாகம், அண்ணாமாளிகை அவர்களின் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: 1502/2018/மதி2 நாள்:09.10.2018
4) இவ்வலுவலக இதே எண்ணிட்ட நடவடிக்கைகள் நாள்: 20.11.2018
5) திரு.K.மோகன் ராஜ், அவர்களின் கட்டணச்செலுத்துச்சீட்டு நாள்:16.11.2018

-----------------

உத்தரவு:-

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புதுத்தாமரைப்பட்டி ஊராட்சி -கொடிக்குளம் II பிட் கிராமம் சர்வே எண்கள்:166/2A2, 2B,167/1B, 1C, 2A, 2B, 2C, 2D, 168 -ல் 25837.75 ச.மீ. மற்றும் இலங்கியேந்தல் ஊராட்சி சர்வே எண்கள் 32/1எ, 32/1பி1(ப), 33/2எ, 33/2பி(ப) - ல் 25279.25 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு, பார்வை 1 மற்றும் 2ல் சுட்டிய அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொண்டு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தி திருத்தியமைக்கப்பட்ட கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு (in principally accepted layout frame) ம.வ./ம.உ.தி.கு எண்:414(R)/2018 என எண்ணிட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் திரு.K.மோகன்ராஜ் என்பவருக்கு பார்வை 3-ல் காணும் கடிதம் மூலம் உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

வரன்முறைக் கட்டணமாக ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும். மேலும், வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் செலுத்தப்பட்ட பின்னரே, இம்மனைப்பிரிவில் அமையும் தனித்த மனைகளுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை 3-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

818

Self attested
K Mohanraj
( K. MOHANRAJ )

Scanned by CamScanner

பார்வை 5-ல் காணும் கடிதத்துடன் கீழ்க்காணும் விபரப்படி முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் செலுத்தப்பட்டதற்கான செலுத்துச்சீட்டு இணைத்து வரப்பெற்றுள்ளன.

1.இலங்கியேந்தல் ஊராட்சி:

| வ. எண் | கட்டண விபரம் / இடத்தின் மொத்த அளவு (ச.மீ) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ. | செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. | செலுத்தப்பட்ட தொகை ரூ. | தொகை செலுத்தப்பட்ட சலான் எண் மற்றும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | வரன்முறைக் கட்டணம் (unsold) 22705 ச.மீ. | 30/- | 681150.00 | 681150.00 | கருவூல செலுத்துச் சீட்டு எண்: 68/16.11.2018 |
| 2. | மேம்பாட்டுக் கட்டணம் (unsold) 22705 ச.மீ. | 25/- | 567625.00 | 567625.00 | ஊராட்சியில் வழங்கப்பட்ட பல்வகை வரவு ரசீது எண்: 31260/15.11.2018 |
| | மொத்தம் | | 1248775.00 | 1248775.00 | |

2. புதுத்தாமரைப்பட்டி ஊராட்சி

| வ. எண் | கட்டண விபரம் / இடத்தின் மொத்த அளவு (ச.மீ) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ. | செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. | செலுத்தப்பட்ட தொகை ரூ. | தொகை செலுத்தப்பட்ட சலான் எண் மற்றும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | வரன்முறைக் கட்டணம் (unsold) 23205 ச.மீ. | 30/- | 696150.00 | 696150.00 | கருவூல செலுத்துச் சீட்டு எண்: 36/16.11.2018 |
| 2. | மேம்பாட்டுக் கட்டணம் (unsold) 23205 ச.மீ. | 25/- | 580125.00 | 580125.00 | ஊராட்சியில் வழங்கப்பட்ட பல்வகை வரவு ரசீது எண்: 26737/17.11.2018 |
| | மொத்தம் | | 1276275.00 | 1276275.00 | |

மேற்கண்டவாறு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் மேம்பாட்டுக்கட்டணம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து கீழ்க்கண்ட விற்பனை செய்யப்படாத மனைபிரிவுகளுக்கு மட்டும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு (மனை எண்கள்: 1,3,5-27,27எ,28,28எ, 29-47, 49, 49எ, 49பி, 49சி, 50, 50எ, 50பி, 50சி, 51-226, 226எ, 227-355, பூங்கா - 1 முதல் 14 வரை | : | 51117.0 ச.மீ |
| பூங்கா மொத்த பரப்பரளவு (மனை எண்: பூங்கா - 1 முதல் 14 வரை) | : | 5207.75 ச.மீ |
| கட்டணம் செலுத்தப்பட்ட மொத்த பரப்பளவு | : | 45909.25 (அ) 45910 ச.மீ |

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவில் அமையும் பூங்காவினை உள்ளாட்சிக்கு தானமாக /10.12.2018-க்குள் பதிவு செய்து கொடுக்கவும் தவறும் பட்சத்தில் மேற்படி உத்தரவு ரத்து செய்யப்படும்.
2. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.
3. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது

Self attested.

819

K Mohanraj

(K. MOHANRAJ)

Scanned by CamScanner

உள்ள உரிமையை தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும், அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கொரினால் அவர்கள் அதனை பொருத்தமானநீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம், நில உரிமை குறித்து முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

4. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. இந்த வரன்முறை மனைகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும் கட்டிடத்திற்கு வரன்முறையாகக் கருதப்பட மாட்டாது.
6. உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளாட்சி அமைப்பு ஒப்புதலின்றி மாற்றம் செய்யக் கூடாது.
7. நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவிலான (In Principle) ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறையோ உள்ளாட்சி துறையோ பொருத்தமான அமைப்பு அல்ல.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
மதுரை கிழக்கு.

20.11.18

பெறுநர் :
திரு.K.மோகன்ராஜ்
239, Lloyds Road,
G.G.Springs IB, Gopalpuram,
Chennai – 600 086.

நகல் : ஊராட்சி செயலாளர், இலங்கியேந்தல் மற்றும் புதுத்தாமரைப்பட்டி ஊராட்சி.

Self attested
K Mohanraj
(K. MOHANRAJ)



Scanned by CamScanner



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate